ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதி

# பாதுகாப்பானதுதான்

## நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

கோலாலம்பூர், செப். 12-

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நில அமிழ்வு ஏற்பட்ட போதி லும் அந்தப் பகுதியில் இருக் கும் கட்டடங்கள் பாதுகாப்பான நிலையில் உள்ளதாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. நேற்று கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் திட்ட மேலாண் மைத் தலைமை இயக்குநர் முகமட் அமின் தலைமையேற்ற மஸ்ஜிட் இந்தியா நில அமிழ் வுச் சம்பவம் தொடர் பான நட வடிக்கைக் குழுவின் கூட்டத்தில் இந்த விவகாரம் தெரிவிக் கப்பட்டது.இந்தக் கூட்டத்தில் பொதுப்பணி இலாகா, கனிமவள - புவி அறிவியல் இலாகா, போலீஸ் படை, தீயணைப்பு - மீட்புப்படை, இண்டாவாட்டர், மலேசியப் பொறியியல் மையம் உள்ளிட்ட 8 அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண் டனர். அவர்கள் அனைவரும் தங்கள் ஆய்வு முடிவுகளை அந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்த தாக கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு தமது அறிக்கையில் கூறியுள்ளது. அந்த அறிக்கைகளின் அடிப்படையில் அங்கு ஏற்பட்ட நில அமிழ்வுச் சம்பவமானது உள் ளூர் விவகாரமாகும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது. ஏற்கெனவே உள்ள நில விசா ரணைத் தரவுகள், புவியியல் தகவல் அடிப்




படையில் அந்த விவகாரம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. எனவே ஜாலான் மஸ்ஜிட் இந் தியா பகுதியும் அங்கிருக்கும் கட்டடங்களும் பாதுகாப் பானவைதான். மக்கள் தாராளமாகச் சென்று வரலாம் என்று இந்தக் கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டிருப்ப தாக கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு தெரி வித்துள்ளது. அதே போல் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் தடுப்புச் சுவரைக் குறுகலாக்கும் பணிகளை மாநகர் மன்றத் தரப்பு மேற் கொண்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.